**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>OS No.53/2019</u>**

<u>முன்னிலை – எஸ். கோபிநாதன், பி.எஸ்சி.பி.எல்.,</u>

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.</u>

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.முகமது காசிம் | தந்தை பெயர் | : திரு.முகமது யூசுப் |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 18.11.2025

**P.W. : 1**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

| | |
|---|---|
| **கேள்வி** | தாவா சொத்து இருக்கும் இடத்தை பழைய கரூர் ரோடு என்றும், புதிய ஆஸ்பத்திரி ரோடு என்றும் அழைத்து வந்தார்களா என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | சர்வே எண்.1910 என்ற சர்வே நம்பர் பிரிபடாத சொத்தா என்றால்? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | பிரிபடாத 1910 சர்வே நம்பரில் எவ்வளவு விஸ்தீரனம் கட்டுப்பட்டது? |
| **பதில்** | 2400 சதுர அடி மற்றொரு பாகம் 2600 சதுர அடி |
| **கேள்வி** | நீங்கள் தாக்கல் செய்த ஆவணங்களுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித |

II ADJ COURT, TRICHY

II ADJ COURT, TRICHY



| | |
|---|---|
| | சம்பந்தமும் இல்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | நீங்கள் தாக்கல் செய்துள்ள பத்திரத்தில் எவ்வளவு சொத்தை விற்றுள்ளீர்கள்? |
| **பதில்** | ஒரு பகுதியை மட்டும் விற்றுள்ளேன். |
| **கேள்வி** | நீங்கள் விற்பனை செய்ததற்கான ஆவணங்கள் உங்கள் கைவசம் உள்ளதா? |
| **பதில்** | வழக்கறிஞரிடம் உள்ளது. |
| **கேள்வி** | தாவா சொத்தை பொறுத்து அரசாங்கம் பட்டா வழங்கிய விவரம் உங்களுக்கு தெரியுமா? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | நீங்கள் தாவா சொத்தை அரசாங்கத்திடமிருந்து ஏலம் எடுத்ததாக சொல்வது தவறு என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | வா.சா.ஆ.5–க்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 18.11.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 18.11.2025